5. கவன ஈர்ப்பு.

(அ) சேலம் மாவட்டம், சேந்தமங்கலத்திலும், சுற்றியுள்ள பகுதிகளிலும் காலரா நோய் பரவியுள்ளது குறித்து

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சேலம் மாவட்டம், சேந்தமங்கலத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் காலரா நோய் பரவியுள்ளது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவரவர்களே, சேலம் மாவட்டம், சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தண்ட கவுண்டனூர், அக்கியம்பட்டி ஆகிய இரு கிராமங்களில் கடுமையான குடல் அழற்சி நோய் (Acute Gastro Enteritis) ஏற்பட்டுள்ளது என்ற தகவல் அறிந்த வுடன், நோய் பரவாமலிருக்க சுகாதாரப் பணியாளர்களால் தேவையான தடுப்பு நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ள பட்டன.

தண்ட கவுண்டனூர் கிராமத்தில், 20—1—1975-ம் நாள் ஒருவருக்குக் கடுமையான குடல் அழற்சி நோய் காணப்பட்டு, பேலுகுறிச்சி ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சை அளிக்கப் பட்டார். அக்கியம்பட்டி கிராமத்தில், 12—3—1975 ஆம் நாள் ஒருவருக்குக் கடுமையான குடல் அழற்சி நோய் கண்டது. அந்நபர் சேந்தமங்கலம் அரசினர் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றார்.

சுகாதாரப் பணியாளர்கள் அவ்விரு கிராம மக்களுக்கும் காலராத் தடுப்பு ஊசிகள் போட்டனர் ; மற்றும் கிணறுகளில் மருந்துகள் கலக்கப்பட்டன. நோய் கண்ட நபர்களின் வீடுகளிலும் கிருமிநாசினிகள் தெளிக்கப்பட்டன. அதன் பிறகு அவ்விரு கிராமங்களிலும் யாருக்கும் இந்நோய் பரவவில்லை.

(முற்பகல் 11-00)

(ஆ) சென்னை பெரிய மருத்துவமனையில் இருதய நோயாளிகள் வார்டில் உள்ள கருவிகள் பழுதடைந்திருப்பதும் நோயாளிகள் பாதிப்பும்

திரு. கோவை செழியன் : தலைவர் அவர்களே, சென்னை பெரிய மருத்துவமனையில் உள்ள இருதய நோயாளிகள் வார்டில் (கார்டியலாஜி டிபார்ட்மென்ட்) உள்ள இயந்திரங்கள் ஆறும் பழுதடைந்து இருப்பதால் நோயாளிகள் பெரிதும் பாதிக்கப்பட் டிருப்பது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, கருவிகள் என்று அறிக்கையில் குறிப்பிட்டது மானீட்டர் என்ற கருவியாகும் என்று நம்பப்படுகிறது. சென்னை பெரிய மருத்துவ மனையிலுள்ள இருதய நோயாளிகளின் வார்டில் (கார்டியாலஜி டிபார்ட்மெண்ட்) ஆறு மானீட்டர்கள் இருக்கின்றன. அவைகளில் மூன்று மானீட்டர்கள் நன்கு வேலை செய்கின்றன். மீதமுள்ள மூன்றும் சில சிறிய டெக்னிகல் கோளாறுகளின் காரணமாக இயங்கவில்லை. ஒன்றில் வரைபடம் (கிராஃப்) சரியாகக் காட்டுவதில்லை. மீதி இரண்டிலும் சில சிறிய இயந்திரக் கோளாறுகள் இருக்கின்றன. எலக்ட்ரோ மெடிகல் செல்லைக் கேட்டதில் அவர்கள் பழுதுபார்க்க இயலாமையைத் தெரிவித்துள்ளார்கள். மேற்படி கருவிகளைச் செய்த கம்பெனியைத் பழுதுபார்க்கும்படி கோரப்பட்டது. அதற்கான ஒப்புதல் புள்ளிப் பட்டியலும் கிடைக்கப் பெற்றன. சப்ளை செய்த கம்பெனியை மேற்படி கருவிகளைப் பழுது பார்க்கும்படி கோரப்பட்டிருக்கிறது. ஆறு கருவிகளில் மூன்று பழுதடைந்திருக்கிற போதிலும் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதில் கார்டியாலஜி டிபார்ட்மெண்டில் எவ்வித இடையூறும் இல்லை.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, கார்டியாலஜி டிபார்ட்மெண்டில் 1972-ல் ஒரு அப்பெரட்டஸ் வாங்கப்பட்டது. அதன் விலை ஒரு லட்சம் ரூபாயாகும். அதன் பெயர் அஸ்ட்ரல். அந்த நிறுவனம் தொடங்கி 6 மாத காலம்தான் அது வேலை செய்தது. இன்று வரையிலும் அந்த ஒரு லட்ச ரூபாய் மெஷின் வேலை செய்யவில்லை. இரண்டாவது, கார்டியாலஜி மானீட்டர்களில் 4 மெஷின்கள் வேலை செய்யவில்லை. அதற்குக் காரணம் என்னவென்றால் கேம்பிரிட்ஜ் என்ற மெஷின் வாங்கியிருக்கிறார்கள். ஆனால் சிறந்தது டோஷ்னிவால் என்ற மெஷின் தான். டோஷ்னிவால் மிஷின் 30,000 ரூபாய்க்குக் கிடைத்தும் கூட டாக்டர் ஏ. எல். அண்ணாமலை அவர்கள் அதிக விலை கொடுத்து கேம்பிரிட்ஜ் மிஷினை வாங்கியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இதையெல்லாம் பிரச்சாரத்திற்குப்பயன்படுத்தக் கூடாது. மெஷின் வாங்குவதற்குக் கமிட்டி இருக்கிறது. அப்போது சூப்பரின்டென்டெண்ட் வேறு யாரோ இருந்தார்கள். டீன் வேறு யாரோ இருந்தார்கள். ஆகவே, இதையெல்லாம் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தக் கூடாது. மெஷீன்களை இயங்க வைக்க இங்கேயிருக்கிற நிபுணர்களுக்குத் திறமையில்லை. அவர்கள் ஸ்பேர் பார்ட்ஸ் வாங்க வேண்டுமென்கிறார்கள். அதற்கு அரசாங்கத்திடம் தொகை வாங்க நேரமாகிறது. ஆகவே காலதாமதம் ஆகிறது.

திரு. கோவை செழியன் : இயந்திரம் வேலை செய்யாததால் நோயாளிகள் கஷ்டப் படுகிறார்கள். அதைத்தான் சொன்னேனே தவிர நான் அமைச்சர்களைக் குறைவாகச் சொல்லவில்லை. இதிலே கொட்டேஷன் வாங்கவில்லை.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஏதோ ஒரு பொருளுக்கு கொட்டேஷன் இல்லை என்று குறிப்பிடுகிறார்கள். இயந்திரங்களில் ஒரே டைப் இருக்க முடியாது. அதில் 3 ரீடிங் 4 ரீடிங் என்று இருக்கிறது. இப்போதுகூட எக்சிபிஷனில் பார்த்தேன் 7 வகையான கருவிகள் இருக்கின்றன. ஆகவே, அதில் ஏதேனும் தவறுகள் இருந்தால் விசாரிக்கலாம். நல்ல முறையில் வாங்குவதுகூட பழுது ஆகிவிடுகிறது.

(6) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு 1972ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/72) கூட்டாய்வுக்குழு திருத்தியமைத்தவாறு

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் துணைத் தலைவரவர்களே,

"தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு, சங்கங்கள் பதிவுச் சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/72) கூட்டாய்வுக்குழு திருத்தியமைத்தவாறு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்'' என்று முன் மொழிகிறேன்.

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, இந்த மசோதா சொசைட்டிகளெல்லாம் கட்டாயமாகப் பதிவு செய்ய வேண்டும் என்பது. கோவாப்பரேடிவ் சொசைட்டி என்று சொன்னால் அதில் ஒவ்வொரு மெம்பருக்கும் கட்டாயமாகப் பதிவு செய்ய வேண்டுமென்ற கட்டாயம் கிடையாது. இங்கே கட்டாயமாக சில சொசைட்டிகளில் எஜுகேஷன், சையன்ஸ், ரிலிஜன், சாரிட்டி, இந்த மாதிரி இருக்கக் கூடிய சொசைட்டிகள் கட்டாயமாகச் செய்யப்படும். அவர்கள் இவைகள் அபிவிருத்தி செய்யக் கூடிய வகையில் இருப்பதுதான் நோக்கமாக இருந்தால் ரிஜிஸ்டர் செய்ய வேண்டும். அல்லது அந்த வருமானத்தைப் பாதுகாக்க வேண்டுமென்று சொன்னால் அல்லது ஒரு சந்தர்ப்பமாகப் பணம் வரக்கூடியதாக இருந்தால் அதைச் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்ற முறையில் இருக்கிறது. 'இங்கே பக்கம் 58-ல் கிளாஸ் 3-ல் கமிட்டியில் விவாதிக்கும் போது, ரிலிஜன், சாரிட்டி, சோஷல் ரிபார்ம், ரெக்ரியேஷன் எக்ஸ்க்ளுடிங் ஸ்போர்ட்ஸ் அண்டு இன்டோர் கேம்ஸ்' என்று செலக்ட் கமிட்டியில் போட்டிருக்கிறது. ஆனால் இங்கே அந்தமாதிரி திருத்தம் கொண்டுவரவில்லை. ஆகவே, இது

* 23—12—1974ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.